## 48

# ஐசுவரியத்தையும் சீஷத்துவத்தையும் குறித்த போதனை

## [19:16-30]

*இயேசு விவாகம் விவாகரத்து ஆகியன பற்றிய போதனையைத் தொடர்ந்து சிறுபிள்ளைக்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்தபின், இயேசுவின் ஊழியத்தில் சீஷர்களின் வாழ்வில் ஐசுவரியம் எனும் தலைப்புக்கு போதனை மாறுகிறது (19:16-30). இந்த மூன்று பாகங்களிலும் பொதுவான தலைப்பு என்று பார்த்தால் அது குடும்பம், ஏனெனில் திருமணம் (விவாகம்), பிள்ளைகள், மற்றும் ஐசுவரியம் ஆகிய அனைத்தும் குடும்பத்துடன் தொடர்புபடுத்துகிறது.*

### *ஐசுவரிய வாலிபனின் கேள்வி (19:16-22)*

***16** அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான்.*

***17** அதற்கு அவர், நீ என்னை நல்லவனென்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளை கைக்கொள் என்றார்.*

***18** அவன் அவரை நோக்கி: எவைகளை? என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக;*

***19** உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார்.*

***20** அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக் கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன? என்றான்.*

***21** அதற்கு இயேசு, நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.*

***22** அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபோது, துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான்.*

***வசனம் 16.*** *மூன்று சுவிசேஷத் தொகுப்புகளிலும், இந்தக் கதை இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்ததுடன் தொடர்கிறது (19:16-22; மாற்கு 10:17-22; லூக்கா 18:18-23). இயேசு ஆசீர்வதித்த காட்சிக்கும், இங்கு விவரிக்கப்படுகிற மனுஷனுடன் அவர் உரையாடிய நாளுக்கும் இடைபட்ட நாட்கள் எவ்வளவு என்று உறுதியாகத் தெரியவில்லை. மாற்கு 10:17 இந்தக் கதையை "பின்பு அவர் (இயேசு) புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு" என்று துவங்குகிறது. மத்தேயு புத்தகத்தில் குறைவான விளக்கமே கொடுக்கப்படுகிறது:* ***அப்பொழுது ஒருவன் வந்து.*** *இந்த மனுஷன் பாரம்பரியமாக "ஐசுவரிய வாலிபன்" என்றே அழைக்கப்படுகிறான். இந்த விளக்கம் சுவிசேஷ தொகுப்புகளின் ஒட்டுமொத்த விவரக் குறிப்பு.*

*அந்த மனுஷன் ஐசுவரியம் உள்ளவனாக இருந்தான். மத்தேயு மாற்கு இருவரும் அவன் மிகுந்த ஆஸ்தியுடையவனாக இருந்தான் என்று சொல்லுகின்றனர் (19:22; மாற்கு 10:22). லூக்காவில் "அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியால்" என்று சொல்லப்படுகிறது (லூக்கா 18:23). அவன் எப்படித்தனக்கு பணத்தைச் சேர்த்தான் என்று தெரியவில்லை; சுதந்திர வீதமாக (மூதாதைகள் வழி) வந்தவையாக இருக்கலாம். எப்படியிருப்பினும், அவனுடைய கண்ணோட்டம் அவை மீது இருப்பதைக் காட்டிலும் அவனுக்கு ஆஸ்திகள் எப்படி வந்தது என்பது முக்கியமல்ல.*

*இந்த மனுஷன் ஒரு வாலிபனாயிருந்தான். மத்தேயு புத்தகத்தில் அவன் "ஒரு வாலிபன்" (neaniskos) என்று இருமுறை குறிப்பிடப்படுகிறான் (19:20, 22). ஹிப்போ கிரேட்ஸின் கருத்தை மேற்கோள் காட்டி, யூத தத்துல ஞானி ஃபிலோ இந்த (வயதுடைய) காலக்கட்டம் 22 லிருந்து 28 வயதைக் குறிக்கும் என்று சொன்னார். வயது பருவத்தை ஏழுகளின் மடங்கில் அவர் குறிப்பிடுகிறார்: "அவன் தன் சரீர வளர்ச்சியை முழுமையாய்ப் பெற்றுக் கொள்ளும் வரை, வாலிபன்தான், அது நான்காவது ஏழு வருடங்களைக் குறிக்கும்."[1] பித்தகோரஸ் எனும் கிரேக்க வாழ்வியல் வரலாற்று ஆசிரியரின் கருத்தை மேற்கோள் காட்டி டையோஜீனஸ் லேயேர்டியஸ், "ஒரு வாலிபன்" (neaniskos) என்பவன் 20 லிருந்து 40 வயதுடையவன் என்றார்.[2] இந்த வெளிச்சத்தில், இந்தக் கதையில் குறிப்பிடப்படுகிற மனுஷன் வாலிபப் பிராயத்தில்தான் இருந்தான் என்று ஒருவர் சொல்ல முடியும்.*

*கூடுதலாக, அவன் ஒரு ஆள்பவன் என்று சொல்லப்படுகிறது. லூக்கா மட்டுமே அவனைத் "தலைவன்" (archōn) என்று குறிப்பிடுகிறார் (லூக்கா 18:18). அவன் ஒருவேளை உள்ளூரில் ஒரு அரசியல்வாதியாகவோ இருந்திருக்கலாம். ஒரு பொருத்தமான சாத்தியக்கூறு என்னவெனில் உள்ளூரிலிருந்த ஒரு ஜெப ஆலயத்திற்கு தலைவனாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு (9:18 ற்கான விளக்கவுரையைக் காண்க). அவனுடைய பதவி எதுவாயிருந்தாலும், அதை அவன் லஞ்சம் கொடுத்தோ யாரையும் ஏமாற்றியோ பெற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அவன் தேவனுடைய கட்டளைகளை கைக் கொண்டிருந்த, ஒரு நல்ல ஒழுக்கம் உள்ளவனாய் இருந்திருக்கிறான் (19:17-20).*

*இந்த நல்ல மனிதன் இயேசுவினிடத்தில் வந்து,* ***போதகரே, நான் நித்திய ஜீவனை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்?*** *என்று கேட்டான். இயேசுவிடம் வந்த சிலர் அவரை அணுகி அவரைப் "போதகரே" என்று*

*அழைத்துள்ளனர் (காண்க 8:19 ற்கான விளக்கவுரை). ஒரு சில பதிவேடுகள் குணப்பெயரான "நல்ல" எனும் வார்த்தையை "போதகரே" என்பதற்கு முன்பாக சேர்த்துள்ளது, அது ஒத்த பதிவேடுகளிலிருந்து பெறப்பட்டவையாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு (காண்க மாற்கு 10:17; லூக்கா 18:18).[3] மத்தேயு தனது புத்தகத்தில் "நல்ல" எனும் குணச்சிறப்பு வார்த்தையை அந்த மனிதன் கேட்ட "காரியத்துக்கேற்ப" சேர்த்துள்ளார்.*

*அவனுடைய கேள்வியில் அவன் ஒரு குறிப்பிட்ட "நல்ல காரியத்தைச்" செய்தால் அவன் நித்திய ஜீவனை சம்பாதிக்க அல்லது பெறுவதற்கு தகுதியுடையவனாக்கும் என்கிற நம்பிக்கையிருப்பது தெளிவாகிறது.* J. W. McGarvey *இந்தக் கோணத்தை ஆதரித்துப் பேசுகிறார்: "அந்த மனுஷன் ஏதோ ஒன்றைச் செய்து அதிலே கிடைக்கும் மேன்மையால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைத்திருக்கிறான்."[4] அவன் தனது வாழ்க்கையிலே ஏதோ ஒன்று குறைவுபடுகிறது என்று நம்பி, தனது நித்திய விதிக்கு என்று ஒன்று தேவை என்பதை உறுதியாக்கிக் கொள்ள விரும்பினான். அவனுடைய கேள்வியின் பின்னணியிலிருந்த உள்நோக்கம் எதுவாயிருந்தாலும், அந்த மனிதன் தன்னுடைய ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வமுடையவனாய் தனது நித்தியத்திற்கான பிரதி பலனை இழக்க விரும்பவில்லை.*

*புதிய ஏற்பாட்டின் பிற இடங்களிலும் இதே போன்ற கேள்விகள் காணப்படுகின்றன. திரளான கூட்டமும், அதிலிருந்து ஆயக்காரரும் போர்சேவகர்களும், யோவான் ஸ்நானனை அணுகி, "போதகரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள் (லூக்கா 3:10, 12, 14). பெந்தெகோஸ்தே நாளில், சுவிசேஷ செய்தியை விசுவாசித்தவர்கள் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து, "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்கள் (நடபடிகள் 2:37). பிலிப்பிய சிறைக்காவலன் பவுலையும் சீலாவையும் பார்த்து "ஆண்டவன்மாரே நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான் (நடபடிகள் 16:30).*

*தால்முத்தில், எலெயேசரைப் பார்த்து சீஷர்கள், "போதகரே, ஜீவியத்தின் வழிகளை எங்களுக்குப் போதியுங்கள், அதினால் நாங்கள் எங்கள் எதிர்கால வாழ்வை வெற்றிகொள்ளக் கூடும்" என்றார்கள்.[5] இந்த வசனத்தில், "நித்திய ஜீவன்" எனும் பதம் மத்தேயு புத்தகத்திலேயே முதல் முறையாகத் தோன்றுகிறது (காண்க 19:29; 25:46). பின்னதாக, இந்தப் பதம் விசேஷமாக யோவானில் பயன்படுத்தப்பட்டது.*

***வசனம் 17.*** *சில பதிவேடுகள், "என்னை நீ நல்லவன் என்று சொல் வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே" என்று வாசிக்கப்படுகிறது (மாற்கு 10:18; லூக்கா 18:19 ஆகியவற்றைக் காண்க).[6] ஆயினும்* NASB *திருமறை இன்னும் மூலப் பிரதியின் வார்த்தைகளை அப்படியே பயன்படுத்துகிறது.* ***எந்த நன்மை என்று நீ என்னைக் கேட்பானேன்? ஒருவர் மட்டுமே நல்லவராயிருக்கிறார்; ஆகிலும் நீ ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினால், கற்பனைகளை கைக்கொள்.*** *கிரேக்க மொழியில், பிரதி பெயர்ச்சொல்லாகிய "என்னை" எனும் பதம் வலியுறுத்தும் வண்ணம் காணுகிறது. இயேசு தமது கேள்வியினாலே, வாலிபன் தம்மைக் குறித்து கொண்டுள்ள எண்ணத்தை பரிசோதித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அந்த*

*தலைவன் ஒரு கல்விகற்ற யூதன் மற்றும் நிச்சயமாக நியாயப்பிரமாணத்தின் கோரிக்கையை அவன் அறிந்திருந்தான். தேவன் ஒருவரைத் தவிர - "நல்லவன்," ஒருவனுமில்லையே - என்று அவனுக்கு நினைவுறுத்தியதின் மூலம் இயேசு அந்த தலைவனுக்கு நன்மையானதை செய்ய ஏதுவாக்கும் மூலக் கூறை சுட்டிக் காட்டுகிறார்.*[7] நமது நல்ல தேவன் பரலோகத்தில் நுழைய விரும்புகிறவனுக்கு தேவைப்படுவது என்ன என்பதை தமது வசனத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தாம் சொல்லியவற்றை தெளிவாக்கும் பொருட்டு, இயேசு வாலிபனிடத்தில் *"கற்பனைகளை கைக்கொள்"* என்று சொன்னார்.

***வசனங்கள் 18, 19.*** அந்த தலைவன், ***எவைகளை?*** என்று கேட்டான். அவன் சில கட்டளைகளை புறக்கணிக்கலாம் என்று குறிப்பிடவில்லை; சில கட்டளைகள் மற்றவைகளைக் காட்டிலும் கனமானது என்று யூகித்தான் *(23:23).*[8]

இயேசு பத்துக் கட்டளைகளில் உறவு முறைகளுடன் சம்பந்தப்பட்ட ஐந்து கட்டளைகளை குறிப்பிட்டுக் காட்டுகிறார்: **கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரஞ் செய்யாதிருப்பாயாக; களவு செய்யாதிருப்பாயாக பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பயாக;** உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக *(காண்க யாத்திராகமம் 20:12-16; உபாகமம் 5:16-20).* இயேசு நேர்மறை (செய்ய வேண்டிய) கட்டளையாகிய "உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்பதை எதிர்மறைக் (செய்யக் கூடாதவைகளாகிய) கட்டளைகளுக்குப் பின்னதாக சேர்த்து வரிசைப்படுத்தினார்; அவைகளுக்கு முன்பாக மோசே வரிசைப்படுத்தினதைப் போல குறிப்பிடுவதற்குப் பதிலாக, இப்படி வரிசைப்படுத்தினார். அவர் கடைசியாகக் குறிப்பிட்ட கட்டளையான, "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதை லேவியராகமம் *19:18* லிருந்து எடுத்துக்காட்டி இயேசு ஒரு சாராம்ஸ கருத்தாகக் குறிப்பிட்டுப் பயன்படுத்தினார். டேவிட் ஹில் குறிப்பிடுகையில் பத்துக் கட்டளைகளின் கடைசி பின்பகுதி லேவியராகமம் *19:18* உடன் சேர்க்கப்பட்டு சிறு பிள்ளைகளுக்கும் புதிதாய் மனமாற்றப்படுவோருக்கும் போதிக்கப்பட்டது என்கிறார் (காண்க ரோமர் *13:9).*[9]

***வசனம் 20.*** அந்தத் தலைவன், **இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக் கொண்டிருக்கிறேன்** என்று உறுதியளித்தான் (காண்க மாற்கு *10:20;* லூக்கா *18:21).*[10] ஒரு வகையில், அந்த மனிதனுடைய வார்த்தைகள் நியாயப்பிரமாணத்தின்படியானது என்று காணுகிறது (காண்க பிலிப்பியர் *3:6*); ஆனால் இன்னொரு வகையில், மலைப் பிரசங்கத்தில் விளக்கமளிக்கப்பட்டிருப்பதுபோல அவன் நியாயப்பிரமாணத்தை கைக் கொண்டிருக்க இயலாது.[11] "நிச்சயமாக அவனுடைய எண்ணப்போக்குக்காக இந்த வாலிபனை நாம் பாராட்ட வேண்டும்." அவன் இந்தக் கட்டளைகளை நிறைவாகக் கைக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தாலும், அவனுக்கே தெரியும் அவனிடத்தில் **ஏதோ ஒன்று குறைவுபடுகிறது.**

***வசனம் 21.*** வாலிப அதிகாரியின் நேர்மை மற்றும் நாகரீகம் அதிலே வெளிப்பட்டாலும், அவனுடைய ஆஸ்தியே (ஐசுவரியமே) தேவனுக்கு அவன் செய்யும் ஆராதனைக்குத் தடையாக இருந்தது என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். இயேசுவுக்கு அந்த மனிதன் மீது அன்பு இருந்தது (மாற்கு *10:21*) எனவே பதிலளித்து, **நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய்,**

**உனக்குண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின் பற்றி வா என்றார்.**

இயேசுவைப் பின்பற்றிப்போக விரும்புகிற ஒவ்வொருவரும் தங்களுடைய ஆஸ்திகளை விற்கும்படி கோரப்படுகிறதா? இல்லை. பட்டணங்கள்தோறும் நகரங்கள்தோறும் இயேசுவும் அவருடைய சீஷர்களும் போனதுபோல அவனும் போகும்படி அவர்களைப் பின்பற்ற விரும்பினால், அவனுக்கு முழுமையான ஒப்புக்கொடுத்தல் தேவை. இங்கே இயேசு பயன்படுத்தின *teleios*, வார்த்தை "முழுமை" அல்லது "வளர்ந்த" என்று பொருள் (1 கொரிந்தியர் 2:6; 14:20; எபேசியர் 4:13; பிலிப்பியர் 3:15; கொலோசெயர் 1:28; 4:12; எபிரெயர் 5:14).[12] இயேசு அவனை ஒரு முழுமையான மற்றும் எல்லாவற்றுக்கும் மேலான பொறுப்பேற்கும்படி குறிப்பிட்டார். உண்மையாகவே பின்பற்றிப் போவதில் நமது ஆஸ்திகள் தடையாக இருக்குமாயின், அவர் அவைகளை விற்கும்படி சொல்லாவிட்டாலும் கூட, அவைகளை விற்பது அவசியமானது.

அந்த மனுஷன் தனது ஆஸ்திகளை விற்றுத் தரித்திரருக்கு கொடுத்து விடுவது மாத்திரம் போதுமானதல்ல (காண்க 1 கொரிந்தியர் 13:3) அவன் இயேசுவைப் "பின்பற்ற" வேண்டியவன், அவர்தான், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று சொன்னார் (யோவான் 14:6). "என்னைப் பின்பற்றிவா" என்று சீஷத்துவத்திற்கு ஒரு அழைப்பை இயேசு அடிக்கடி கொடுத்தார் (8:22; 10:38, 39; 16:24-26 ஆகிய வசனங்களைக் காண்க). நான்கு மீன்பிடிப்பவர்களை அழைத்தபோது இதே வார்த்தையை இயேசு பேசினார் (4:19) ஆயக்காரனாகிய மத்தேயுவை அழைத்தபோதும் அப்படிப் பேசினார் (9:9), இந்த வாலிப தலைவனைப் பார்த்து செய்யச் சொன்ன வார்த்தைகளை அவர்கள் செய்தார்கள்.

**வசனம் 22. அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபோது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.** இந்த வாலிபன் வரும்பொழுது இயேசுவிடம் சந்தோஷத்துடன் ஓடிவந்தான் (மாற்கு 10:17), ஆனால் போகையிலே துக்கத்தோடே போனான், ஏனெனில் கர்த்தர் அவனுடைய ஆஸ்திகளை விட்டு வரவேண்டும் என்று சொன்னார். "அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியால் துக்கமடைந்தான்" என்று லூக்கா எழுதினார் (லூக்கா 18:23). அவனுடைய "ஆஸ்தி" (*ktēma*) அநேகமாக நிலம், வீடுகள், மற்றும் வீட்டிலிருந்த சாமான்கள் அனைத்தையும் குறிக்கலாம்.[13] அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பின்பற்றிப் போக இவைகளில் சிலவற்றை விட்டு வந்தார்கள் (காண்க 19:29 ற்கான விளக்கவுரை).[14]

இந்த மனிதனுடைய விஷயத்தில், பரலோகத்திலுள்ள பொக்கிஷங்களைப் பெற வேண்டுமானால், உலகப் பிரகாரமான பொக்கிஷங்களை விட்டுத்தான் ஆக வேண்டும். மலைப் பிரசங்கத்தில் இயேசு சொன்னார். "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (6:21), "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" (6:24). இயேசு சொன்ன உவமைகளில் ஒன்று, புதைக்கப்பட்டிருந்த ஒரு பொக்கிஷத்தை ஆதாயப்படுத்திக் கொள்ள, அதாவது இராஜ்யத்தைப் பெற ஒருவன் சந்தோஷத்தோட தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றான்

*(13:44)*. அந்த வாலிபனோ இயேசுவைப் பற்றிக் கொள்ள மனதில்லாமல், தனது ஆஸ்திகளைப் பற்றிக் கொள்வதைத் தெரிந்து கொண்டான். Douglas R. A. Hare என்பவர் அந்த தலைவனின் முடிவைக் குறித்து பின்வரும் மதிப்பீட்டை அளித்தார்:

> தரித்திரக்கு அவன் தன்னுடைய ஆஸ்தியின் ஒரு பங்கை விற்று அதைக் கொடுப்பதை ஒரு வெட்கத்துக்குரிய காரியமாக நினைத்திருக்கலாம். ஆஸ்தியின் முழுவதையும் விட்டு விடுவது என்பது: உரிமை, அந்தஸ்து மற்றும் பொருளாதார அதிகாரம் அனைத்துமே அதிலே போய் விடக்கூடும். அறியப்படாத காரியத்துக்காக தனது வசதிகளையும் பாதுகாப்பான உலகத்தை விட்டுவிட அவன் தயாராயில்லை. அறியப்படாததும் பயப்படவைக்கக் கூடியதுமான உலகத்துக்கு இயேசு அவனை அழைத்தார். அவன் தனது ஆஸ்தியினால் தான் அடையாளப்படுத்தப்பட்டான்; புதிய ஒரு அடையாளத்தை அவனால் கண்டுபிடிக்க இயலவில்லை. அவன் தான் எந்த அளவுக்கு தனது உலகத்தில் "பாத்திரமுள்ளவன்" (தகுதியுடையவன்) என்பதையும் அந்த நிலைமையில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் எந்த வித "பாத்திரமும்" உடையவர்களல்ல என்பதையும் அவன் அறிந்திருந்தான்.[15]

## இயேசுவின் மதிப்பீடு (19:23-26)

**[23]அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே சொல்லுகிறேன்.**
**[24]மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**
**[25]அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு: அப்படியானால் யார் ரட்சிக்கப்படக் கூடும் என்றார்கள்.**
**[26]இயேசு அவர்களைப் பார்த்து, மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.**

**வசனம் 23.** வாலிபன் போன காரியம் **இயேசு தம் சீஷர்களிடம் ஐசுவரியவன் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்று சொல்ல ஏதுவாக்கியது. லூக்கா 18:24ல் அவர் அந்த "வாலிபனைப்பார்த்து" இவைகளைச் சொன்னார் என்றும், மாற்கு 10:23ல் "இயேசு சுற்றிப் பார்த்து" இவைகளைச் சொன்னார் என்றும் சொல்லுகின்றனர். அநேகமாக, அந்த மனிதன் பிரிந்து போவதை கவனித்துக் கொண்டிருந்து தம்முடைய சீஷர்களிடமாய்த் திரும்பிப் பார்த்து இந்த வார்த்தைகளை பேசியிருக்கவேண்டும்.

"அரிது" எனப்படும் கிரேக்க வார்த்தை (*duskolōs*) சுவிசேஷப் பகுப்புகளில் இங்கு மட்டும் காணப்படுகிறது (19:23; மாற்கு 10:23; லூக்கா 18:24). டஸ்க்லாஸ் என்றால் "கஷ்டப்பட்டு" என்று பொருள். மத்தேயு 7:14ல் இயேசு சொன்னார்.

*"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழிநெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்."* பரலாகத்துக்கு கொண்டு செல்லும் பாதை எளிதானதல்ல (7:13, 14 ற்கான விளக்கவுரையைக் காண்க).

மாற்கின் சில ஆதிகால பதிவேடுகளின்படி இயேசு சொன்ன வாக்கியமான *"ஐசுவரியவான்கள்"* எனும் வாக்கியத்துடன் கூடுதலாக *"ஐசுவரியத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்போர்"* எனும் பதம் சேர்க்கப்பட்டிருந்தது (மாற்கு 10:23, 24).[16] தேவனிடத்தில் நம்பிக்கைவைப்பதைக் காட்டிலும் *"ஐசுவரியத்தின் மீது தங்களுடைய நம்பிக்கையை வைப்பவர்கள்"* தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவது கூடாத காரியம். இந்த சொற்றொடர்களெல்லாம் கர்த்தருடைய போதனையை இலகுவாக்கிக் கொடுக்க ஏதுவாக நகல் எடுப்போரால் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியாக இருக்கலாம்.

**வசனம் 24.** தமது எச்சரிப்பை விளக்கப்படுத்தும் பொருட்டு இயேசு, **ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவதைக் காட்டிலும், ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும்** என்றார். இதில் வரும் இரண்டாம் பகுதி, கூடாத காரியத்தை முகவுரைப்படுத்துகிற ஒரு பழமொழிச் சொல். ஒட்டகம் பலஸ்தீனா பகுதியில் மிகப் பெரிய ஒரு மிருகம், அதே வேளையில் ஊசியின் காது என்பது மிகச் சிறிய ஒரு திறப்பு. பாபிலோனில், மிகப் பெரிய மிருகம் யானை, ஆதலால் அங்கிருந்த சொல் வழக்கு சற்று வித்தியாசமானதாயிருந்திருக்க வேண்டும். தால்முத்தில், *"யானை ஊசியின் காதில் நுழைவது போல* ... ஒரு மனிதனை கனவில் காண இயலாது"[17] - அதாவது, ஒருவன் ஒரு காரியம் தனக்கு நடக்குமென்று காணவோ கற்பனை செய்யவோ முடியாதது. அதிலே வழங்கப்படும் மற்றொரு சொல் வழக்கு "நீங்கள் பம்பேடித்தாவிலிருந்து ஒருவேளை வந்திருக்கலாம் ... அங்கே தான் *ஒரு யானையை ஊசியின் காது வழியே கொண்டு வருவார்கள்*"[18] - நடக்காதவைகளை காணுவது என்பது இதன் பொருள். நிச்சயமாக, அங்கிருந்த கல்வியாளர்கள் மிதமிஞ்சிய தந்திரசாலிகள் என பேர் பெற்று இருந்துள்ளனர்.

இப்படி வேறுபட்ட உருவகமாகப் பேசப்படுவதை இயேசு பயன்படுத்துவதில் விரும்பமுற்றிருந்தார். அவர்தான் துரும்பு மற்றும் உத்திரம் குறித்த வார்த்தைகளைப் பேசினார் (7:3, 4), கடுகு விதையும் நன்கு வளர்ந்த மரமும் (13:31, 32), கடுகும் மலையும் (17:20), கொசுவும் ஒட்டகமும் (23:24). இயேசுவின் இரட்டுரமொழிதல் குறித்து மைக்கேல் சில வேடிக்கையான வார்த்தைகளைக் குறிப்பிடுகிறார்: "ஒரு காரியம் முக்கியத்துவம் அளிக்கப்படாததை இரட்டை அர்த்தத்தில் சொல்லப்படும்போது, இயேசுவின் வார்த்தைகளை கேட்போருக்கும் நமக்கும் சிரிப்புத் தோன்றும்; ஏனெனில் அவர்கள் ஒரு பெரிய உருவமும், திமிலும் உடைய முடி அடர்த்தியாக கொண்டு, மூச்செறியும், எச்சில் ஒழுகும் ஒரு மிருகம் (ஒட்டகம்) தன்னை நெருக்கி ஒடுக்கி ஊசியின் காது வழியாக நுழைவதை கற்பனையில் நினைத்துப் பார்க்கும் போது நகைப்பைத்தான் கொண்டுவரும்"[19] லூக்கா, ஒரு வைத்தியனாக (கொலோசெயர் 4:14), அறுவை சிகிச்சைக் குறிய ஊசியை கிரேக்க மொழியில் பயன்படுத்திப் பேசியிருக்கிறார் (*belonē*; லூக்கா 18:25),[20] மத்தேயு பொதுவாக தைக்கப் பயன்படுத்தும் ஊசியை (*rhaphis*) பயன்படுத்தியிருக்கிறார். இயேசு ஊசியின் நோக்கத்தைக் குறிப்பிடாமல்

*ஊசியில் இருக்கிற சிறிய துவாரத்தை வலியுறுத்துகிறார்.*

*இயேசுவின் இந்த வாக்கியத்தை பெலவீனப்படுத்த ஏதுவாக முயற்சிகள் நடந்தன. பழங்கால வியாக்கியானிகள் ஊசியின் காது என்பதை எருசலேமிருந்த குறுகலான வாசல்களைக் குறிப்பதாகக் கூறினர், சுமையை இறக்கி வைத்துவிட்டு மிகவும் கூனி குறுகி ஒட்டகங்கள் அந்த வாசல்கள் வழியாய் நுழைய இயலாது. மற்றவர்கள் மலைகளின் ஊடே காணப்படுகிற சிறிய துவாரம் போலுள்ள குகை வழியைக் குறிப்பிட்டு அதின் வழியே ஒட்டகங்கள் கடந்து செல்வதன் கூடாத காரியத்தை ஒப்பிட்டனர்.*

*இன்னும் சில வியாக்கியானிகள் பின்னதான பதிவேடுகளிலிருந்து "கயிறு" எனும் வார்த்தையை (kamilos) எடுத்து சுமக்கிற "ஒட்டகம்" எனுமிடத்தில் பயன்படுத்தினர் (kamēlos).[21] ஆயினும், ஒரு கயிறு ஒட்டகத்தைக் காட்டிலும் எளிதாக ஊசியின் காதில் நுழைய முடியாது, எனவே அரிது எனும் பதம் மாற்றப்படாமல் பேசப்படுகிறது.*

*ஐசுவரியத்தை அதிகமாய் நேசிக்கிறவன் பரலோகத்துக்குள் போக இயலாத, நடைமுறை சாத்தியமற்ற தன்மையை இயேசு நிச்சயமாகப் பேசினார். ஐசுவரியவான் தனது ஆஸ்தியின் மீது நம்பிக்கை வைத்து அதுவே அர்த்தமுடையதாக எண்ணிக் கொண்டு இருந்திருப்பான் என்பது தெளிவு. தனது பூமிக்குரிய ஐஸ்வரியத்தின் மீது நம்பிக்கைகளை வைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவனுக்கு நித்திய ஜீவனுக்குரிய விதிகளையும் நிபந்தனைகளையும் சந்திப்பது என்பது மிகக்கடினமானதாக அவனுக்குத் தோன்றும்.[22]*

*பவுலின் வார்த்தைகளின்படி அழைப்பை ஏற்க "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை" (1 கொரிந்தியர் 1:26). ஐசுவரியவான்கள் இயேசுவிடம் காட்டின எதிர் கிரியைக்கு முரண்பாடாக, "அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள்" (மாற்கு 12:37;* NKJV).

***வசனம் 25. சீஷர்கள்*** *உடனடியாக இயேசுவின் வாக்கியத்தின் உட்பொருளைப் புரிந்து கொண்டு* ***அதைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.*** *ஆஸ்தி தேவனுடைய தயவுக்கு அடையாளம் என்பதாக யூதர்கள் பார்த்தார்கள் (சங்கீதம் 112:1-3).[23] சீஷர்கள் ஐசுவரியவான்கள் பரலோகத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்ற வார்த்தையைக் கேட்ட போது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அதன் விளைவாக* ***யார் ரட்சிக்கப்படக்கூடும்?*** *என்று கேட்டார்கள். இன்னொரு வார்த்தையில் குறிப்பிட்டால், "தேவனால் அதிகமாய் ஆசீர்வாதம் பெற்றவர்கள் இரட்சிக்கப்படக் கூடாதாகில், பிறகு யார் இரட்சிக்கப்படக் கூடும்?" இங்கே சீஷர்கள் தொலைவில் உருமறைந்த ஐசுவரிய வாலிபனை மனதில் கொண்டு பேசியிருக்க வேண்டும். அவன் "ஒரு முன் மாதிரியுள்ள குடிமகனாய் இருந்தான்: நாகரிகம் தெரிந்தவனும், கற்பனைகளை கைக்கொள்வதிலும், தருமம் செய்பனும், பக்தியுள்ளவனுமாயிருந்தான்."[24] எனவே அவர்கள், "அப்படிப்பட்ட நபர் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனில், மற்றவர்களாகிய நமக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது?" என்று கேட்டனர்.[25]*

***வசனம் 26. இயேசு*** *ஒரு ஐசுவரியமிக்க மனிதன் பரலோகத்துக்குப் போக இயலாது என்பதை வலியுறுத்தின போது,* ***இயலாதது*** *(கூடாது) என்னும்*

வார்த்தையை எடுத்து விட்டு, சமன்பாடாக **மனுஷரால்** கூடாதது **தேவனால்** கூடும் என்றார். அவருடைய சித்தத்துக்குள் கூடும் எனும்போது தேவனுடைய வல்லமைக்கு அப்பால் எதுவும் செய்ய முடியாது.[26]

## அப்போஸ்தலரின் தியாகம் (19:27-30)

***27அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்.***

***28அதற்கு இயேசு, மறு ஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***29என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்;***

***30ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.***

***வசனம் 27.*** பேதுரு மீண்டும் ஒருமுறை சீஷர்கள் சார்பில் பேசக்கூடியவராக இருந்தார் (15:15; 16:16; 17:4). அவர் இயேசுவிடம், ***இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?*** என்று கேட்டார். அதற்கு எவ்விதகண்டனமும் தெரிவிக்காத இயேசு, அவருடைய கேள்விக்கு பதிலளித்தார். இந்த மனுஷர்கள் உண்மையில் எல்லாவற்றையும் விட்டு இயேசுவை பின்பற்றினார்கள். W. F. Albright மற்றும் C. S. Mann ஆலோசனையாக, பேதுருவின் கேள்வி அந்த வாலிபனைக் குறிப்பதாக இருந்தது என்கின்றனர். “அந்த வாலிபன் செய்ய விரும்பாமற்போன எல்லாவற்றையும் நாங்கள் செய்திருக்கிறோம். எங்களுடைய பலன் என்னவாக இருக்கும்?” என்பதுபோல் பேதுரு கேட்கிறார்.[27]

***வசனம் 28. இயேசு*** மறு உத்திரவாதமளித்து, தமது அப்போஸ்தலர்களிடம் அவர்களுடைய சொந்த தியாகங்கள் இராஜ்யத்தினிமித்தம் செய்யப்பட்டால் அவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றார். அவர்களிடம் அவர், ***மனுஷகுமாரன் மறுஜென்ம காலத்திலே தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது அவர்கள் பன்னிரண்டு சிங்காசனத்தின்மேல் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் மீதும் நியாயத்தீர்ப்பு செய்கிறவர்களாய் வீற்றிருப்பார்கள்*** என்றார். அந்த பன்னிரண்டு சிங்காசனங்கள் என்பது உண்மையானவைகளா அல்லது உருவகமானவைகளா? நியாயந்தீர்த்தல் ஆளுகையின் அதிகாரத்தில் பிறப்பிக்கப்படுவதா அல்லது அப்போஸ்தலரின் உபதேச அடிப்படையிலான

*தீர்ப்பா? "இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரம்" என்பது யாரைப் பற்றி பேசுகிறது? இந்தச் சொற்றொடர் பூமியில் உள்ள சபையைக் குறிப்பிடுகிறதா அல்லது உன்னதங்களிலிருக்கிற அனைத்து பரிசுத்தவான்களையும் குறிப்பிடுகிறதா? மறுஜென்மம் என்பது எதைக் குறிப்பிடுகிறது? அது பூமியிலே கிறிஸ்தவ யுகத்தைக் குறிக்கிறதா அல்லது எதிர்வரும் பரலோக நிலையையா?*

*"மறுஜென்மம்" (palingenesia) எனும் வார்த்தையின் பொருளாக முழு விளக்கமும் காணப்படுகிறது. இந்தத் தொகுப்பு வார்த்தை "மறுபடியும்" (palin) "சந்ததி" அல்லது "ஜென்மம்" (genesis) ஆகிய வார்த்தைகளை உள்ளடக்கிய ஒரு பதம். அநேக சந்தர்ப்ப வசனப் பகுதிகளில் யூத மத எழுத்தாளர்கள் இந்த palingenesia என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளனர். ஃபிலோவின் எழுத்துக்களில், ஜலப்பிரளையத்துக்குப் பிந்தின புதிய உலகத்தை சுட்டிக்காட்டுகிறது.[28] ஜோசிபஸ் இஸ்ரவேலர் பாபியோனிய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு வந்த சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.[29] இவைகளுக்கப்பால் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகிற ஒரே palingenesia என்ற வார்த்தை தீத்து 3:5ல் தான், அது "மறுஜென்ம முழுக்கையும் [ஞானஸ்நானத்தையும்] பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலையும்" குறிப்பிடுகிறது. இந்த பயன்பாடு இயேசுவின் உபதேசமாகிய "ஆவியினாலும், ஜலத்தினாலும் மறுபடியும் பிறப்பதை" சம்பந்தப்படுத்துகிறது (யோவான் 3:3, 5).*

*வசனம் 28க்கு இரண்டு அறிவார்ந்த விளக்கங்கள் காணுகிறது.[30] முதலாவது விளக்கம் "மறுஜென்மம்" எனும் பதத்துக்கு சமமானதாக கிறிஸ்தவயுகத்தை அல்லது சபை/இராஜ்ய யுகத்தை குறிப்பிடுகிறது. எல்லாவற்றிற்கும் பிறகு இயேசு, பரலோகத்துக்கு ஏறின போது, அங்கே பிதாவின் வலது பாரிசத்தில் (சிங்காசனத்தின் மேல்) இயேசு வீற்றிருந்தார் (நடபடிகள் 2:29-36; 1 கொரிந்தியர் 15:23-28; கொலோசெயர் 1:13; எபிரெயர் 1:13), இது வசனம் 28ல் சொல்லப்பட்டபடியே நடந்தது. ஆகையால், "மறுஜென்ம காலம்" என்பது தற்போதைய யுகத்தைக் குறிக்கும், ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, மறுபடியும் பிறந்தவர்களாகிறார்கள் அல்லது மறு ஜென்மம் அடைகிறார்கள் (தீத்து 3:5).[31] இந்தக் கண்ணோட்டத்தின்படி, குறிப்பிடப்படும் சிங்காசனங்கள் உண்மையான சிங்காசனங்களல்ல, ஆனால் உருவாகமாகப் பேசப்பட்டவை. அவர்களுடைய போதனைகள் மூலமாகவும், தலைமைத்துவத்தின் மூலமாகவும், மனித வரலாற்றின் கடைசி யுகத்தினூடே, அப்போஸ்தலர்களின் வழிகாட்டலும் வழிநடத்துதலும் சபைக்கு அளிக்கப்படும். H. Leo Boles "இந்தக் கருத்து அப்போஸ்தலர்கள் பூமியில் இருந்தகாலத்தில் நியாயத்தீர்ப்பு செய்கிறவர்களாய், பிரமாணங்களையும் கைக்கொள்ளும் நியமங்களையும் ஒழுங்கு செய்து வைத்தார்கள், இப்பொழுது, தங்களுடைய ஏவப்பட்ட எழுத்துக்கள் மூலம், சபையின் அங்கத்தினர்களை அவர்கள் ஆளுகை செய்கிறார்கள் என்று எழுதினார்."[32]*

*"மறுஜென்ம காலம்" என்பதற்கு ஈடான இரண்டாம் விளக்கம் பரலோகத்திலிருக்கும் நிலை, அல்லது "வரவுள்ள யுகம்" எனும் கண்ணோட்டம். இந்த சொல்நடை ஒத்த வசனப்பகுதிகளில் காணப்படுகிறது (மாற்கு 10:30; லூக்கா 18:30). இது உண்மையாதலால் தற்சமயம் கிறிஸ்து ஆளுகை செய்கிறார், ஆகிலும் ஒரு நாளில் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் (1 கொரிந்தியர் 15:24), மேலும் பிதாவுடன் நித்தியத்துக்கும் ஆளுகை செய்வார்*

(வெளிப்படுத்தின விசேஷம் 22:3). "மறு ஜென்மகாலம்" என்பது, "ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும்" குறிப்பிடுகிறது, அப்பொழுது தேவன் "எல்லாவற்றையும் புதிதாக்குகிறார்" (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-5; காண்க ஏசாயா 65:17; 66:22; ரோமர் 8:18-25; 2 பேதுரு 3:13). "இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள்" என்பது இரட்சிக்கப்பட்டு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் உன்னதங்களின் ஆளுகைக்கு உட்பட்டவர்களுமாகிய அனைவரையும் குறிக்கும் (காண்க 1 கொரிந்தியர் 6:2, 3; 2 தீமோத்தேயு 2:12; வெளிப்படுத்தின விசேஷம் 3:21; 21:9-14).

இயேசு முக்கியமாக இதே காரியத்தைத்தான் இன்னொரு வசனப்பகுதியில் அப்போஸ்தலர்களிடம் சொன்னார், இருப்பினும் "மறுஜென்மம்" எனும் பதத்தை "இராஜ்யம்" என்று பயன்படுத்தியுள்ளார். "மேலும் எனக்கு நேரிட்ட சோதனையிலே என்னோடே கூட இருந்தவர்கள் நீங்களே, ஆகையால் என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராஜ்யத்திலே என்னுடைய பந்தியில் போஜனபானம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள்" என்றார் (லூக்கா 22:28-30). முன்னும் பின்னும் வருகிற வசனங்களின் பின்னணியை வைத்து "இராஜ்யம்" எனும் பதம் இப்பொழுது நடைமுறையிலிருக்கிற (சபையை) நிலைமையைக் குறிக்கலாம் அல்லது எதிர்நோக்கியிருக்கும் (பரலோகத்தின்) நிலையைக் குறிக்கலாம். இந்த வசனப்பகுதி மேற்சொன்ன இரண்டு விளக்கங்களில் எது சரியானது என்ற கேள்விக்கு தெளிவாக பதிலளிப்பதில்லை, ஆகிலும் இராஜ்யத்தில் போஜன பந்தியிருப்பதை எதிர்கால சம்பவமாகக் குறிப்பிடப்படுகிறது. பரலோகத்தில் அப்போஸ்தலர்கள் ஆளுகை செய்வார்கள் என்பது பிரதிபலன் கொடுக்கப்படுவதைக் குறிக்கிறது, இந்த வசனத்தில் இது இயல்பானது. மேலும் பூமிக்குரியவைகளை பரலோகத்திலுள்ளவைகளுடன் கலந்து இயேசு பேசியிருக்க சாத்தியமுண்டு.

**வசனம் 29.** மேலும் இயேசு சொன்னார், **என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்.** இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய் பன்னிரண்டு சிங்காசனங்கள் மேல் வீற்றிருப்பார்கள் என்ற வாக்குத்தத்தம் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பொருந்தும். இந்த வசனத்திலும், இதற்கு அடுத்த வசனத்திலும், கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தம், "எல்லாருக்கும்" பொருந்தும். இயேசுவைப் பின்பற்றின அநேகரும் தங்களுடைய குடும்ப நட்புறவுகளையும், தொழில்களையும், ஆஸ்திகளையும் விட்டுவிட்டுத்தான் இயேசுவைப் பின்பற்றினார்கள் (4:22; 8:21, 22; 9:9). இதற்கு முன்பு, இயேசுவையே தங்களுடைய வாழ்க்கையில் முதலாவதாக வைக்கவும், ஆதரிக்கிற தனது குடும்ப அங்கத்தினர்களுக்கும் மேலான முதன்மைத்துவம் அளிக்கப்பட வேண்டும் என இயேசு போதித்தார் (10:37). இங்கு அவர் தங்களுடைய ஆஸ்திகளையும், குடும்ப உறவுகளையும் "[அவருடைய] நாமத்தினிமித்தம்" விட்டு விடுகிற எவனும் பெரிய

ஆசீர்வாதங்களை அதற்குப் பதிலாக பெறுவார்கள் என்றார். மாற்கு குறிப்பிடும் போது இந்தத் தியாகங்களைச் செய்யும்போது "சுவிசேஷத்தினிமித்தம்" செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது (மாற்கு 10:29), லூக்கா குறிப்பிடுகையில் "இராஜ்யத்தினிமித்தம்" என்று சொன்னார் (லூக்கா 18:29).

"நூறத்தனையாய்" என்னும் சொற்றொடர் "அநேகமடங்கு" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆகிலும் நூறத்தனையாய் என்பதுதான் கிரேக்க வசனப்பகுதியின் உண்மையான நேரடி மொழிபெயர்ப்பு அல்லது "நூறு மடங்கு" (KJV), இது வழக்கத்துக்கு மாறாக உற்பத்தியாகும் அல்லது (NIV) விளைச்சலைக் குறிக்கும் விவசாயப்பதம் (13:8 க்கான விளக்கவுரையைக் காண்க). கிறிஸ்து தம்மைப் பின்பற்றி வருவோர் அதிகமான உலகப் பொருள் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்ற பொருளில் பேசவில்லை. மாறாக, ஒரு விசுவாசிக்குரிய ஆசீர்வாத பிரதிபலன்கள் சந்தோஷம், நிறைவேற்றம், மற்றும் உறவுமுறைகள் ஆகிய வடிவத்தில் வரும்; இவைகள் ஒருவர் செய்த எந்த தியாகத்திலும் பெரிதானதாக, அவரைப் பின்பற்றிப்போக ஏதுவாக்கும். இயேசுவின் வார்த்தைகளை நாம் நேரடிப் பொருளில் விளக்கமளிப்பதில் கவனமாக இருக்க வேண்டியது அவசியமென்றாலும், எண்ணற்ற அவருடைய ஊழியர்கள் வீட்டை விட்டுப் போனதால் தங்களுக்கு அநேக வீட்டுக்கதவுகள் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டுள்ளனர், குடும்பத்தை விட்டுப் போனவர்கள் சபை முழுவதும் தனது குடும்பமாக இருக்கிறார்கள் என்பதை மனதில் வையுங்கள்.[33] கடைசியாக, கிறிஸ்துவினிமித்தம் இந்த வாழ்வில் தங்களைத் தியாகம் பண்ணுகிறவர்கள் மறுமையிலே நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

**வசனம் 30. ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும் பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்** என்று இயேசு சொல்லி முடித்தார் (காண்க 20:16; லூக்கா 13:30; 22:24-27). கர்த்தருடைய விவாதத்தைக் குறித்து மாற்குப் புத்தகத்தில் அப்போஸ்தலர்களில் யார் பெரியவனாயிருப்பான் என்ற அவர்களின் வாக்குவாதத்தைக் குறித்து இயேசு அவர்களுக்குச் சொன்னார், "முதன்மையாயிருக்க விரும்புகிறவன், எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கிறான்" (மாற்கு 9:33-35). இந்த வசனப் பகுதியில் தொடர்ந்து அவர் அதே கூட்ட மக்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். பேதுரு தனது கேள்வியை அவர்கள் எல்லாரையும் சேர்த்துதான் கேட்டார் (19:27). இயேசு வலியுறுத்தி எந்த ஒருவரும் யாருக்கும் மேலானவர்களாக பதவியிலோ ஸ்தானத்திலோ இருப்பதில்லை என்றார். முதன்மையான இடத்தைத் தேடினவர்கள் தாழ்த்தப்படுவார்கள், அப்படித் தேடாதவர்கள் உயர்த்தப்படுவார்கள்.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## இயேசுவும் ஆஸ்தியுள்ளவர்களும் *(19:16-30)*

இயேசு ஐசுவரியவான்களுக்கு விரோதமானவர் என்ற நம்பிக்கை தவறான புரிந்து கொள்ளுதலாகும். உண்மையாகவே அவர் பட்சபாதம் உள்ளவரல்ல. அவருடைய சீஷர்கள் கூட்டத்தில் சகேயுவும், அரிமத்தியா ஊரானாகிய

*யோசேப்பும், நிக்கோதேமுவும் இருந்தனர் (லூக்கா 19:1-10; மத்தேயு 27:57; யோவான் 3:1, 2; 19:38, 39). ஐசுவரியமுள்ளவர்கள் மற்றவர்களுக்கு தங்கள் பணத்தால் ஆசீர்வாதத்தையும், தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்பவும் ஊழியம் செய்யலாம் (1 தீமோத்தேயு 6:17-19); அப்படிச் செய்வதால் நிச்சயமாக அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தக் கூடும். ஐசுவரிய வாலிபனுடைய பிரச்சனை பணம் அல்ல, பண ஆசை என்பதுதான் (1 தீமோத்தேயு 6:10). ஐசுவரியவானாக இருப்பதற்காக அவன் கண்டனம் பண்ணப்படவில்லை.*

*இந்த வாலிபனிடத்தில் கேட்டது போன்ற அதே தியாகங்களை இயேசு ஒவ்வொருவரிடத்திலும் கேட்பதில்லை. அந்த மனிதனுடைய பிரச்சனையை அவர் அறிந்து அவனிடத்தில் அப்படிக் கேட்டார். கிறிஸ்துவைப் பின்பற்றும்படி நமக்குள்ள எல்லாவற்றையும் அவர் விற்கும்படி சொல்லாவிட்டாலும், அவரைப் பின்பற்ற தம்மை ஒப்புக் கொடுக்கும்போது நமது உலகக் காரியங்கள் தடையாக இருக்கக் கூடாது (பிலிப்பியர் 3:7-11). உலகப் பொருள் நம்முடைய தேவனாகும்போது, உண்மையான ஒரே தேவனுக்கு நாம் இடமளிப்பதில்லை (6:24). நாம் இரண்டிற்கும் ஊழியம் செய்ய முடியாது.*

---

*குறிப்புகள்*

[1]Philo *On the Creation* 36. [2]Diogenes Laertius *Lives of Imminent Philosophers* 8.7. [3]Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 39; *காண்க* NKJV. [4]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 167. [5]Talmud *Berakoth* 28b. [6]Metzger, 39–40; *காண்க* KJV; NKJV. [7]*சங்கீதங்கள் அடிக்கடி தேவனுடைய நன்மையை மகிழ்வுடன் கொண்டாடுகின்றன (சங்கீதம் 16:2; 25:8; 34:8; 86:5; 100:5; 106:1; 107:1; 118:1, 29; 135:3; 136:1; 145:9). மிஷ்னாவும் ஜனங்களை உற்சாகப்படுத்தி தேவனை அவருடைய நன்மைகளுக்காக ஆசீர்வதிக்கச் சொல்லியது: "நல்லவரும் நன்மை செய்தவருமானவர் ஆசீர்வதிக்கப்படுவாராக"* (Mishnah *Berakoth* 9.2). [8]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 225. [9]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 283. [10]Metzger, 40; *காண்க* KJV; NKJV.

[11]Donald A. Hagner, *Matthew 14—28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 558. [12]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 70–71. [13]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 572. *பாவ்எர் பழங்கால இலக்கியங்களிலிருந்து இரண்டு சமமான குறிப்புக்களைக் கொடுத்தார். ஒரு ஐஸ்வரிய வாலிபன் டயோஜெனிஸ்ஸை பின்பற்றினான், மற்றும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது ஆஸ்திகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு சைனிக்காக மாறினான்.* (Diogenes *Epistles* 38.5; Porphyry *Life of Plotinus* 7.) [14]*எல்லாவற்றையும் விட்டுப் பின்பற்றிப் போவது ரபீமார்களின் போதனைக்கு எதிரானது, என்பது ஆர்வமிக்க செய்தி. தால்முத்தில் ஒரு பகுதி வாசகர்கள் தனது சொத்தில் 5ல் ஒரு பங்குக்கு மேல் செலவிடக் கூடாது என்று அறிவுறுத்துகிறது* (Talmud *Ketuboth* 50a.) [15]Hare, 227. [16]Metzger, 90; *காண்க* KJV; NKJV. [17]Talmud *Berakoth* 55b (emphasis added). [18]Talmud *Baba Metzia* 38b (emphasis added).

[19]Michael J. Wilkins, “Matthew,” in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 120. [20]William Kirk Hobart, *The Medical Language of St. Luke* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 61.

[21]Metzger, 40. Metzger *“இரண்டு கிரேக்க வார்த்தைகள் ஒரு மாதிரியான உச்சரிப்பைக் கொண்டவை” என்று விளக்கினார். வேதபாரகர்களால் எளிதாக குழப்பிக்கொள்ளப்பட ஏதுவானவை, குறிப்பாக ஒருவர் வாசிக்கும்போது கேட்டுக் கொண்டிருப்பவர்.* [22]John J. Hughes, “Needle,” in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:510. [23]*தேவனைப் பின்பற்றுபவன் தன் ஆஸ்திகளைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று நம்பப்பட்டது, ஏனெனில் அவரே சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றும் காரணமும் ஆனவர்.* (*Letter of Aristeas* 204, 205.) [24]Hare, 228. [25]Ibid. [26]*காண்க ஆதியாகமம் 18:14; யோபு 42:2; சகரியா 8:6; மாற்கு 9:23; லூக்கா 1:37; 2 கொரிந்தியர் 9:8; பிலிப்பியர் 4:13.* [27]W. F. Albright and C. S. Mann, *Matthew,* The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 233. [28]Philo *Life of Moses* 2.12. [29]Josephus *Antiquities* 11.3.9. [30]*சிலர் இந்த வசனத்தை தங்களுடைய ஆயிர வருட அரசாட்சி உபதேசத்துக்குப் பயன்படுத்துகின்றனர், ஆனாலும் அவர்களுடைய கருத்தாகிய கிறிஸ்துவின் உண்மையான ஆயிரவருட அரசாட்சி பூமியில் நடக்கும் என்பது வசனங்களுக்கு சாக்குபோக்கான அர்த்தங்களைக் கொண்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளனர்.*

[31]James Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 298–99. [32]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 396. [33]Lewis, *Matthew,* 73.